DEPOSITION OF WITNESS
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.I, BHAVANI
PROSECUTION WITNESS

CC. No. 186/2022 Crime No. 17/2022 Station Bhavani

| | | | |
|---|---|---|---|
| Name | PW-6/Lw6- இந்திராணி | Village | |
| Husband's Name | சண்முகம் | Taluk | |
| Age | 36 | Calling | |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of Oath Act the day of | | | 20.05.2024 |

**முதல் விசாரணை-**

**எதிரிகள் தவசியப்பன், வீராசாமி, மணி ஆகியோர் ஆஜர் இல்லை. குவிமுச பிரிவு 317 ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது.**

நான் இரட்டை வாய்க்காலில் குடியிருந்து கொண்டு, கூலி வேலை செய்து வருகிறேன். இந்த வழக்கின் எதிரிகளை எனக்கு தெரியும். தேதி மற்றும் மாதம் நினைவில்லை கடந்த 2 வருடங்களுக்கு முன்பு மதிய வேளையில் எதிரி தவசியப்பனின் வீடும், எங்களது காடும் ஒட்டி உள்ளது. எங்களது காட்டில் தண்ணீர் கட்டினால் தவசியப்பன் வீட்டிற்கு ஓதம் வருவதாகவும், அதனால் தண்ணீர் கட்டக்கூடாது என்றும் தவசியப்பன் கூறி வீராசாமி, மணி, மாரியம்மாள், ரமேஷ், கவின், மேகலா, தவசியப்பன் மற்றும் அய்யம்மாள் ஆகியோர்கள் எங்கள் வீட்டிற்கு வந்து எனது கொழுந்தனார் அ.சா.1 மற்றும் எனது மாமனார் அ.சா.2 யையும் முளைக் குச்சியால் மண்டையில் அடித்தார்கள். அதில் அ.சா. 2 க்கு இரத்தம் வந்தது. அ.சா.1 க்கு இரத்தக்காயம் ஏற்பட்டது. மேற்படி சம்பவங்களை நேரில் பார்த்தேன். அடிப்பட்டவர்களை மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றோம். போலீசார் என்னை விசாரித்தனர்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

எனது குடும்பத்திற்கும், எதிரி குடும்பத்திற்கும் பூமி சம்பந்தமாக முன்விரோதம் இருந்து வந்தது. நீங்கள் சம்பவயிடத்தில் இல்லை என்று சொன்னாலும், இவ்வழக்கிற்காக வேண்டி பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னாலும், சரியல்ல.

நான் கூறுகிறேன் நீங்கள் சொல்வது போல் எந்த சம்பவமும் நடைறெவில்லை என்று சொன்னாலும், நீங்கள் எதிரிகள் மீது இருந்த முன்விரோதத்தை மனதில் வைத்துக்கொண்டு சம்பவயிடத்தில் இல்லாத எதிரிகள் இச்சம்பவத்தில் ஈடுபட்டதாக சொல்லி பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால், சரியல்ல.

DEPOSITION OF WITNESS
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.I, BHAVANI
PROSECUTION WITNESS

CC. No. 186/2022 Crime No. 17/2022 Station Bhavani

| | | | |
|---|---|---|---|
| Name | PW-5/Lw4- ஆனந்தன் | Village | |
| Father Name | கண்ணுப்பையன் | Taluk | |
| Age | 50 | Calling | |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of Oath Act the day of | | | 20.05.2024 |

**முதல் விசாரணை-**

**எதிரிகள் தவசியப்பன், வீராசாமி, மணி ஆகியோர் ஆஜர் இல்லை. குவிமுச பிரிவு 317 ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது.**

நான் இரட்டை வாய்க்காலில் குடியிருந்து கொண்டு, கூலி வேலை செய்து வருகிறேன். இந்த வழக்கின் எதிரிகளை எனக்கு தெரியும். தேதி மற்றும் மாதம் நினைவில்லை கடந்த 2 வருடங்களுக்கு முன்பு மதிய வேளையில் அ.சா.1 பிரகாஷ் என்பவர் வீட்டில் நான் இருந்தபோது தவசியப்பன், அவரது மனைவி, அவரது மகன்கள், மருமகள்கள், பேரன்கள் அனைவரும் அ.சா.1 ன் வீட்டிற்கு வந்து சத்தம் போட்டுக் கொண்டிருந்தார்கள். தவசியப்பன் மனைவி எனது மருமகன் அ.சா.1 ன் மீது சரமாரியாக கற்களை கொண்டு தாக்கினார். நான் எனது மருமகனை அடிப்பதை தடுத்தேன். அப்போது எனது உடைகள் கிழிந்துவிட்டது. இதனை கேட்க வந்த அ.சா.2 அம்மாசையை தவசியப்பனின் மூத்த மகன் மொளைக் குச்சியால் அடித்துவிட்டார். அப்போது பஞ்சு மில்காரர் வந்து ஏன் இப்படி அடிக்கிறீர்கள் என்று பேசினார்கள். எதிரிகள் அடித்ததில் அ.சா.1 மற்றும் 2 க்கு உடலில் அனைத்து இடங்களிலும் இருந்து இரத்தம் வந்தது. பஞ்சு மில்காரர் வந்து பேசியதும் எதிரிகள் அங்கிருந்து ஓடிவிட்டனர். பின்னர் ஆம்புலன்ஸ் மூலம் மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம். போலீசார் என்னை விசாரித்தனர்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

எனது மகள் குடும்பத்திற்கும், எதிரி குடும்பத்திற்கும் பூமி சம்பந்தமாக முன்விரோதம் இருந்து வந்தது. எனது வீட்டிற்கும், எனது மகள் வீட்டிற்கும் சுமார் 30 கிலோ மீட்டர் இருக்கும். நான் கூறுகிறேன் நீங்கள் சம்பவயிடத்தில் இல்லை என்று சொன்னாலும், உங்கள் மகளுக்காக வேண்டி பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னாலும், சரியல்ல.

DEPOSITION OF WITNESS
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.I, BHAVANI
PROSECUTION WITNESS

CC. No. 186/2022 Crime No. 17/2022 Station Bhavani

| Name | PW-4/Lw3- பவுனாயாள் | Village | |
|---|---|---|---|
| Husband's Name | ஆனந்தன் | Taluk | |
| Age | 40 | Calling | |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of Oath Act the day of | | | 20.05.2024 |

**முதல் விசாரணை-**

**எதிரிகள் தவசியப்பன், வீராசாமி, மணி ஆகியோர் ஆஜர் இல்லை. குவிமுச பிரிவு 317 ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது.**

நான் இரட்டை வாய்க்காலில் குடியிருந்து கொண்டு, கூலி வேலை செய்து வருகிறேன். இந்த வழக்கின் எதிரிகளை எனக்கு தெரியும். தேதி மற்றும் மாதம் நினைவில்லை கடந்த 2 வருடங்களுக்கு முன்பு மதிய வேளையில் அ.சா.1 பிரகாஷ் என்பவர் வீட்டில் நான் இருந்தபோது தவசியப்பன், அவரது மனைவி, அவரது மகன்கள், மருமகள்கள், பேரன்கள் அனைவரும் அ.சா.1 ன் வீட்டிற்கு வந்து சத்தம் போட்டுக் கொண்டிருந்தார்கள். தவசியப்பன் மனைவி எனது மருமகன் அ.சா.1 ன் மீது சரமாரியாக கற்களை கொண்டு தாக்கினார். நான் எனது மருமகனை அடிப்பதை தடுத்தேன். அப்போது எனது உடைகள் கிழிந்துவிட்டது. இதனை கேட்க வந்த அ.சா.2 அம்மாசையை தவசியப்பனின் மூத்த மகன் மொளைக் குச்சியால் அடித்துவிட்டார். அப்போது பஞ்சு மில்காரர் வந்து ஏன் இப்படி அடிக்கிறீர்கள் என்று பேசினார்கள். எதிரிகள் அடித்ததில் அ.சா.1 மற்றும் 2 க்கு உடலில் அனைத்து இடங்களிலும் இருந்து இரத்தம் வந்தது. பஞ்சு மில்காரர் வந்து பேசியதும் எதிரிகள் அங்கிருந்து ஓடிவிட்டனர். பின்னர் ஆம்புலன்ஸ் மூலம் மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம். போலீசார் என்னை விசாரித்தனர்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

எனது மகள் குடும்பத்திற்கும், எதிரி குடும்பத்திற்கும் பூமி சம்பந்தமாக முன்விரோதம் இருந்து வந்தது. எனது வீட்டிற்கும், எனது மகள் வீட்டிற்கும் சுமார் 30 கிலோ மீட்டர் இருக்கும். நான் கூறுகிறேன் நீங்கள் சம்பவயிடத்தில் இல்லை என்று சொன்னாலும், உங்கள் மகளுக்காக வேண்டி பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னாலும், சரியல்ல.